ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்க ஸ்ரீவிவேசந ஸமாலோசநம்

[ஸ்ரீ உ. வே. ஏதாபிஷேகம்
கோவிந்த நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்]

முன்னுரை

ந்யாயவேதாந்த வித்வான் மதுராந்தகம் வீரராகவாசார்யர் ஸ்வாமி பெயரால் வெளிவந்திருக்கும் "ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநம்" என்னும் நூல் எழுதுவிக்க இது எழுதப்படுகிறது.

இதில் மிகச் சுருக்கமாகப் பத்து விஷயங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்விஷயங்களில் சில-கோர்ட்டு ரெகார்டுகளைக்கொண்டும், சில-பரம்பரையாக இன்றளவும் பலர் சொல்லக்கேட்டுப்போருவதை யிட்டுமே எழுதப்படுகின்றன. இது ஓரளவு தத்துவமுணர்த்த எழுதப்படுகிறதேயன்றி யார்மீதும் காழ்ப்பும் சார்புங்கொண்டு எழுதப்படவில்லை. இதில் காட்டப்படும் விஷயங்களை ஸரியான ஆதாரங்கொண்டு மறுத்துரைத்தால் அவை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஸரியான ஆதாரமொன்றுமில்லாமலும், ப்ரத்யக்ஷவிருத்தமாகவும் எழுதப்பட்ட மதுராந்தகம் ஸ்வாமியின் 'ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநம்' ஓர் நூலாக ஒப்புக்கொள்ளப்படுமேயானால், உபபத்தியுக்தங்களான விஷயங்களைக்கொண்ட இந்த ஸ்ரீரங்க ஸ்ரீவிவேசந ஸமாலோசநமும் ஏன் விலை செல்லாது? இதில் காணும் விஷயங்கள் நெடுநாட்களாகப் பலர் சொல்லிவருவதுதான். பலரறிய இங்கு எழுதப்படுகிறது.

விஷயம் 1. ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநமெழுதிய மதுராந்தகம் ஸ்வாமியைப்பற்றிச் சில வார்த்தைகள்

இந்த ஸ்வாமி, ஓர் சிறந்த வித்வானுக்கு எடுத்துக் காட்டாய் அமைந்தவர். பரமசாந்தர். ஆதாரமற்ற விஷயங்களைக் கொண்டு சர்ச்சையில் காலப்போக்காதவர். எதையுமே ஆதாரத்துடன் பேசுபவர் எழுதுபவர். யாரிடத்தும் காழ்ப்புணர்ச்சியற்றவர். ஸகல பூர்வாசார்யர்களிடத்தும் மிக்க ஆதரங்கொண்டவர். அடியேனிடம் மிக்க வாத்ஸல்யம் கொண்டவர்.

இத்தகைய பெருமையுடையவர், 'அநார்ஜவமே வடிவெடுத்தவர்' என நிரூபிக்கப்பட்ட D. T. தாதாசார்யரின் ஓர் சுவடியை ஆதாரமாகக்காட்டி, 'எல்லா ஆழ்வார்களும் ஆசார்யர்களும் திவ்யதேசங்களும் பூர்வம் வடகலையே' என எழுதத்துணிந்தது அடியேனுக்கு வியப்பை உண்டாக்குகிறது. "வடமாள் என்றால் வடகலையார்" என்கிற இவருடைய அபூர்வகல்பனம் சாதுர்யத்தை வெளிப்படுத்தவில்லை. இதனை இவர் ஸமதஸ்கமாக எழுதியிருக்கமுடியாது. சிலரின்

உள்வெதுப்புக்குத் தத்காலசாந்தியளிக்க இதையெழுதியிருக்கவேணும். இந்த ஸ்வாமியின் பிற்காலத்தில் இந்தச் சுவடி காணப்படுமேயானால், இது இவருடையதன்று என்று உபயகலையாருமே சபதம்பண்ணுவர்கள். நடையும் விஷயமும் அத்தகையது. அல்லது ராஜஸதாமஸ புராண ப்ரவர்த்தநத்துக்குப் பிரமனுக்குச் சொன்னது இவரிடத்தும் காரணமாகலாம். ஸ்ரீரங்கநாதன் இவரை லீலைக்கு விஷயமாக்கி விட்டானத்தனை. இப்படி இவரைப்பற்றி எழுதவேண்டி வந்ததை நினைத்து வருந்துகிறேன்.

விஷயம் 2. D. T. தாதாசாரியரின் செவ்வைக்கேடு

இவரெழுதிய ''ஸம்ப்ரதாயப்ரதீபம்'' என்னும் சுவடி மஹா வித்வான் காஞ்சீ ஸ்வாமியால் நிரஸ்தமாயிற்றென்பதை உபயகலையாருமே அறிவர். காஞ்சீ ஸ்வாமி இவரெழுத்து இவர் ஸம்ப்ரதாயத்தவர்களுக்கே பாதகமானதென்று காட்டியிருக்கிறார்.

அதாவது:- அமுதனாரிடமிருந்த ஸ்ரீரங்கம் ஸந்நிதி நிர்வாஹத்தைக் கைப்பற்ற, ஸ்வாமி எம்பெருமானார் கூரத்தாழ்வானை அவரகத்தில் நிமந்த்ரணமிருக்கப் பண்ணி, த்ருப்தி சொல்லும்போது நிர்வாஹத்தையும் கோயில் சாவிகளையும் கேட்டு வாங்கப்பண்ணினார் என்னும் ஓர் ஐதிஹ்யம் உபயகலையாராலும் சொல்லப்பட்டு வருகிறது. கோயிலொழுகு முதலானவற்றிலும் உள்ளது.

அதனை D. T. தாதாசாரியர் எம்பெருமானார் காலத்துக்குப் பிற்பாடு ஒருவர் செய்ததாக எழுதி, வடகலை ஸந்நிதி தென்கலையாக்கப்பட்டதாகத் திரித்துக் கூறியிருக்கிறார். அவர் யார் என்பதைக் காட்டவில்லை. நெடுநாள் வழக்கத்தையே மாற்றமுடிந்த அப்படிப்பட்ட ஒருவர் அப்ரஸித்தராயிருப்பாரா? எதையும் தமக்கு ஸாதகமாக ஆக்கப்புகுந்து திக்கித்திணறுவதும் மூக்கறுபடுவதும் D. T தாதாசாரியருக்கு ஸ்வபாவஸித்தம். தம் ஊரான திருவரங்கத்தைப் பற்றித் தம்பி பெயரால் ஓர் சுவடி எழுதி, ஸ்ரீ உ. வே. வித்வான் புத்தூர் அட்வகேட் S. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமியின் ஸுதர்சநத்தால் பங்கப்பட்டதும் எல்லாருமறிந்ததே. ஸ்ரீரங்கம் எம்பெருமானார், நம்மாழ்வார் திருமுகமண்டலத்தில் வடகலைப் புண்ட்ரரேகை இருப்பதாகக் கூசாமல் பொய் எழுதுகிற D. T. தாதாசார்யரின் செவ்வை எத்தகையதென்பதைக் கண்ணுடையார் இரு திருவுருவங்களையும் ஸேவித்து நிச்சயித்துக்கொள்ளலாம். நம் மதுராந்தகம் ஸ்வாமியும் இப்படி ராக்கண்ட குழியில் பகலில் விழலாமா? இந்த D. T. தாதாசார்யரை இவர் பின்பற்றலாமா?

விஷயம் 3. வடகலை தென்கலை வ்யவஹாரம்

ஸ்ரீவைஷ்ணவர்கள் எல்லாருக்குமே ஊர்த்வபுண்ட்ரம் இடைவெளியோடு கூடிய ஹரிபாதத்வயாக்ருதியான தென்கலைத் திருமண் காப்பே. இதனை ஆதாரத்துடன் நிலைநாட்டுகிறேன். வடகலை தென்கலை வ்யவஹாரம் திருமண்காப்பைப்பற்றி வந்ததன்று — சாஸ்த்ரார்த்தாநுஷ்டாநத்தைப்பற்றி வந்ததே.

அதாவது :- குணாநுகுணமான ப்ரவ்ருத்திபரர்களான உபாஸகர்களே வடகலையார். ப்ரபத்தி சாஸ்த்ரமான திருமந்த்ரார்த்தநிஷ்டர்களாய், நிவ்ருத்திபரர்களே தென்கலையார். திருமந்த்ரார்த்தத்தை நன்கு நிரூபிப்பதாலே திவ்யப்ரபந்தங்களை இவர்கள் முக்யமாகக் கொண்டார்கள். ஆகையால் இவர்கள் தென்மறையையும் பற்றினவர்களென்று தென்கலையார் எனப்பட்டார்கள். தேசிகனும் தேசிகாநுயாயிகளும் ப்ரபத்தி நிஷ்டர்களேயாகையாலே தென்கலையாரேயாம். 'தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே' என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்ததே அவரைத் தென்கலை என உறுதிப்படுத்துகிறது. ஆக, உபாஸகர்களோ ப்ரபந்நர்களோ யாராகிலும் அர்த்தாநுஷ்டாநத்தால் வடகலை தென்கலை என்கிற பேதம்கொண்டிருந்தாலும், ஸ்ரீவைஷ்ணவர்களாகையாலே ஹரிபாதத்வயாக்ருதியான தென்கலைத் திருமண்காப்பையே தரித்துவந்தார்கள். இந்த ஹரிபாதத்வயாக்ருதிக்குத் தென்கலைத் திருமண் என வ்யவஹாரம் பிற்பட்ட காலத்தில் வந்தது. முன்பு ஊர்த்வபுண்ட்ரமென்று மாத்ரமே பெயர் ''நீறு செவ்வேயிடக்காணில்'' என்கிறவிடத்தில் ஈட்டில் இதனைக் காணலாம். இப்போது (முறம்போன்ற) சூர்ப்பாக்ருதியிலோ, (மூங்கிலிலைபோன்ற) வேணுதளாக்ருதியிலோ காணப்படும் வடகலை ஊர்த்வபுண்ட்ரம் தேசிகனால் சிலருக்காகக் கல்பிக்கப்பட்டது. இப்போது 300 வருஷங்களாக இது வைஷ்ணவர்களில் ஒரு சாரார்களிடத்துப் புகுந்துவிட்டது.

வடகலையாரை—சாஸ்த்ரிகள் என்றும், வர்ணதர்மிகள் என்றும் அந்தணர், மறையோர் என்றும், விப்ரர் என்றும், தென்கலையாரை – ஸாரஜ்ஞர் என்றும், தாஸவ்ருத்திகளென்றும், அடியார், தொண்டர் என்றும், ஆசார்யஹ்ருதயத்தில் நிரூபித்திருப்பதை 6-வது சூர்ணைமுதல் 37-வது சூர்ணைமுடிய மணவாளமாமுனிகளின் வ்யாக்யாநத்துடன் ஸேவித்தால் நன்கறியலாம். அங்கு ''அத்யயநஜ்ஞாநாநுஷ்டாநங்களாலே ப்ராஹ்மண்யமாகிறப்போலே சந்தஸ்ஸாயிரமும் அறியக்கற்றுவல்லாரானால் வைஷ்ணவத்வஸித்தி'' என ஓர் சூர்ணையிட்டு, அழகியமணவாளப்பெருமாள் நாயனார்—

ஸ்ரீவைஷ்ணவர்களாகவேணுமேயானால் திவ்யப்ரபந்தங்களைக் கற்றுத் தெளியவேணும் என்கிற வழியால் அருளிச்செயல் கற்ற ஸ்ரீவைஷ்ணவ ஸாமாந்யத்தையும் தென்கலையாரே என்கிறார். இது ஏற்றிச் சொன்னதன்று. கண்ணுடையார் இன்றைக்கும் காணலாம்.

ஆகவே, தேசிகன் காட்டிய வழியில் போமவர்கள் வடகலையார் மற்றையாசாரியர்கள் காட்டின வழியில் போமவர்கள் தென்கலையார் என்பது ஸமீபகாலத்து வாதமேயொழிய இதற்கு ஆசார்யர்கள் காலத்தில் ஆதாரம் கிடையாது. எல்லாம் வடகலையே என்கிற மதுராந்தகம் ஸ்வாமி கூற்று அடியற்றது. எல்லாம் முதலில் தென்கலையே என்பதே உண்மை.

ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநத்தில் பக்கம் 13ல் வில்லிபுத்தூர்ப் பகவரைப் பற்றி எழுதிய மதுராந்தகம் ஸ்வாமியைக் கேட்கிறேன். "தேவரீர் கூறுவதுபோல் வில்லிபுத்தூர்ப் பகவர் சாத்தாத ஸ்ரீவைஷ்ணவராய் சதுர்த்தவர்ணத்தவரானால், திருவயிந்திரபுரத்து ப்ராஹ்மணர்கள் அவரைத் தங்கள் துறையில் ஏன் நீராடவருவதில்லை எனக்கேட்பர்களா? அவர்கள் வினவே வில்லிபுத்தூர்ப் பகவரை ஸ்ரீவைஷ்ணவ ப்ராஹ்மணோத்தமர் எனக்காட்டவில்லையா? அவர் தனியாக நீராடினால் இவர்களுக்குக் குறை ஏன்? விலக்ஷணபுருஷரான அவரின் தனி நீராட்டம் இவர்களை மற்றையார் பழிக்குமளவுக்கு முடிந்தது தானே காரணம். விமர்ஸகுஸலரான மதுராந்தகம் ஸ்வாமி விமர்ஸியாததேனோ? வில்லிபுத்தூர்ப் பகவரும், கேவலப்ராஹ்மணர்களை "யூயம் வர்ணதர்மிண:— நீங்கள் வர்ணதர்மாநுஷ்டாதாக்கள்; வயம் விஷ்ணுதாஸா:— நங்கள் எம்பெருமான் அடியார்கள்; அஸ்மாகம் தாஸ்யவ்ருத்திநாம் — அடிமைத் தொழில்கொண்ட எங்களுக்கும், யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி:— அடிமைத் தொழிலற்ற உங்களுக்கும் ஸம்பந்தம் கூடாது" என்றார். நடுநிலையாளர்களே! நன்கு கவனியுங்கள். குளங்காத்தலான ப்ராஹ்மண தர்மாநுஷ்டாநம் உயர்ந்ததா? கோயில் காத்தலான ஸ்ரீவைஷ்ணவதர்மம் உயர்ந்ததா? இக்காலத்து வடகலையார் போரிடுவது இக்கோயில்களில் உரிமைக்குத்தானே. ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்திகள் ஒவ்வொன்றுமே இவர்களுக்குப் பேரிடிகளாம். உண்மையில் ஆசார்ய ஹ்ருதயகாரர் ப்ரபத்தி நிஷ்டர்களான எவரையும் குறைசொல்லவில்லை. இப்போது கிடைக்கவரியவர்களான உபாஸகர்களைத் தான் இகழ்ந்தார். இவர்களும் உண்மையில் தேஸிகாநுயாயிகளேயானால் தாஸ்யவ்ருத்திகளே; சந்தங்களாயிரமும் அறியக்கற்று வைஷ்ணவர்களானவர்களே. இந்தச் சண்டைக்கே மூலகாரணமான ராமாநுஜ

த்வயாபாத்ரத்தையும், தேசிகன் யாரோ சிலருக்காகக் கல்பித்த சூர்ப்பாக்ருதி வேணுதளாக்ருதிகளான புண்ட்ரங்களையும் விட்டு, ப்ரபந்த ஸ்ரீவைஷ்ணவர்களுக்கான அநாதிஸித்தமான ஹரிபாதத்வயாக்ருதி ஊர்த்வபுண்ட்ரத்தை தரித்தார்களேயானால் இவர்களுடன் ஸந்நிதிகளில் கூடிக் குலாவத் தடை ஏது? ஆகவே சாஸ்த்ரஸித்த வடகலையார் இப்போது நம்மில் யாருமில்லை.

விஷயம் 4. வடகலைத் திருமண்காப்பைப் பற்றிய உண்மை

முற்காலத்தில் ப்ராஹ்மணர்கள் அனைவரும் வைஷ்ணவர்களே. அதாவது விஷ்ணுவுக்கே பரத்வம் என்ற கொள்கை உடையவர்களே. இவர்களில் சைவர்கள் கிடையாது முதலில் விஶிஷ்டாத்வைதி ஸ்ரீவைஷ்ணவர்களும், ஆதிசங்கரர் காலத்திற்குப்பிறகு அத்வைதிகள், விஶிஷ்டாத்வைதிகள் என இருவகுப்பினருமே இருந்தனர். இதற்குச் சான்று மிகப்பழைய சங்க இலக்கியங்களில் வைஷ்ணவ மதமே காணப்படுவதும், ஆதிசங்கரர் தொடங்கி "நாராயண ஸ்ம்ருதி:" என்று கையெழுத்திடுவதும், ஆதிசங்கரர் தம் பாஷ்யங்களில் சிவபரமாக, என் அந்யதேவதாபரமாக ஓர் வாக்யமும் ஓர் ஶ்லோகமும் எழுதாததுமேயாகும். இந்த அத்வைதிகளும் வேணுதளாக்ருதியில், புருவமத்தியிலிருந்து ஊர்த்வபுண்ட்ரமே இட்டுவந்தார்கள். இன்றைக்கும் அவர்களில் பலரைக் குடி குடியாகக் காணலாம். சங்கரர் பரம்பரையில் வந்தாரொருவர், ஸ்ரீவைஷ்ணவர்களால் தங்கள் மதம் அழிந்துவிடுமென நினைத்து ஜநங்களை வசப்படுத்த துர்தேவதையான ஶக்தியை உபாஸிக்கத் தொடங்கினர். அதிலிருந்து அவரும் அவர் பரம்பரையாரும் பஸ்மதாரிகளானார்கள். பரம்பரையாக வந்த நாராயண ஸ்ம்ருதியை விடமுடியவில்லை காலக்ரமத்தில் ப்ராஹ்மணாத்வைதிகள் பலரும் பஸ்மதாரிகளாய் ஶைவர்களாகிவிட்டார்கள்

ஆகவே, அத்வைதிகளும் முற்காலத்தில் வைஷ்ணவர்களான மைக்குச்சேர நெற்றியில் சந்தனத்தால் வேணுதளாக்ருதியில நடுவில் இடைவெளியுடன் புருவங்களின் நடுவிலிருந்து மேல்நோக்கிப் புண்ட்ரமிட்டு வந்தார்கள். ஆதிசங்கரர் உட்பட இவர்கள் ஸகுணப்ரஹ்மமாக உபாஸித்தது விஷ்ணுவையேயாம். இன்றைக்கும் அத்வைதிகள் சிலர் மறந்தும் புறந்தொழாமாந்தராயே உள்ளார்கள் இதற்கு எடுத்துக்காட்டாக, ஸ்ரீமான் க்ருஷ்ணப்ரேமீ என்பவரையும், ஸ்ரீரங்கம் அம்மாமண்டபம் ரோட்டிலிருக்கும் ஶ்ரௌதபாடசாலை அத்யக்ஷரையும் காணலாம். இவ்விஷயத்தை விசாரித்துத் தெளிவும் பெறலாம்.

ஸ்வாமி தேசிகன் இத்தகைய அத்வைதபண்டிதர்கள் பலரை வாதில் வென்றார். இவர் வாதிகளின் துஸ்தர்க்கங்களைத் தம் ஸத்தர்க்கங்களால் வென்றமையையிட்டே தேசிகனுக்கு ''தார்க்கிக கேஸரீ'' என மற்றையாசாரியர்கள் ஒருவருக்குமில்லாத சிறப்புப்பெயர் ஏற்படலாயிற்று.

அத்வைதிகளுடன் இவர் வாதிடும்போது ஓர் பணயம்வைத்தார். அதாவது அவர்கள் தோற்றால் விசிஷ்டாத்வைதிகளாகிவிடவேணும் என்பதே அது. அவர்களும் தோற்றார்கள்; விசிஷ்டாத்வைதிகளானார்கள். அப்போது அவர்களின அத்வைத வேஷமும் மாற வேண்டாவோ? அத்வைத பாஹ்ய சிஹ்நமோ சந்தநத்தாலான ஊர்த்வபுண்ட்ரமேயாம். அதனை ஸ்வாமி தேசிகன் ச்வேத ம்ருத்திகையான திருமண்ணால் முன்போலவே வேணுதளாக்ருதியில் நடுவில் மஞ்சள் ஸ்ரீசூர்ணத்துடன தரிக்க நியமித்தார். ஏன்? தாமிட்டு வந்த ஹரிபாதத்வயாக்ருதியான தென்கலைத் திருமண்காப்பையே இடப்பண்ணலாகாதோ? எனக்கேட்கலாம். அவர்கள் உபாஸகர்கள்; வர்ணதர்மநிஷ்டர்கள், ப்ரவ்ருத்திபரர்கள். திவ்யப்ரபந்தங்களிலும் திவ்யதேசங்களிலும் ப்ராவண்யமற்றவர்கள், கேவலஸம்ஸ்க்ருத வேதாந்தமாத்ரத்தில் ப்ரமாணபுத்தியும் ஊற்றமும் கொண்டவர்கள், அஸக்ருத்ப்ராசனம், விதவாவபநம், அபிவாதனம், கன்னத்தில் அறைந்துகொள்வது, குட்டிக்கொள்வது இன்னமித்தகைய ஸாமாந்ய தர்மநிஷ்டர்கள். அதிகமேன்? இப்போது ஸ்மார்த்தர்கள் என்ன என்ன கொண்டிருக்கிறார்களோ அதையெல்லாம் உடையவர்கள். பண்டைநாளாலே எம்பெருமான் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும்கொண்டு எம்பெருமான் கோயில் சீய்த்துப் பல்படிகால் குடிகுடி வழிவந்தாட்செய்யும் தொண்டர்களானவர்களுடன் முற்கூறியவர்களைக் கலக்கவிடக்கூடாதென்று ஸ்வாமி தேசிகன் அவர்களைத் தனித்துக்காணும்படி ஓர் புண்ட்ரகல்பனை பண்ணி வைத்தார். காலக்ரமத்தில் அவர்களின் ஸந்ததியார் ப்ரபன்ன ஸ்ரீவைஷ்ணவர்களுடையவும், திவ்யப்ரபந்தங்களுடையவும், திவ்ய தேசங்களுடையவும் வைபவமறிந்து திருந்தி, ஸ்ரீவைஷ்ணவர்களுடன் சேர்ந்து வாழ ஆசைகொண்டார்கள். இவர்களும் அவர்களின் ஆசாரவைகல்யம் ஓரளவு நீங்கினமைகொண்டு உகந்து, கலந்து பழக ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள், தம் புண்ட்ரத்தையும், மற்றும் சில ப்ரகாரங்களையும் விடாததுதான் இப்போது நம் மதுராந்தகம் ஸ்வாமியை இப்படியோர் நூல் எழுதப் பண்ணிற்று.

ஆகவே, இப்போது பார்க்கப்படும் வடகலைத் திருமண் ஸ்வாமி தேசிகனால் பிறருக்காக உண்டாக்கப்பட்டதே; அவர் காலந்தொடங்கி

ஏற்பட்டதே. ஆனால் அவர் காலத்தில் ஸ்ரீவைஷ்ணவ ஸமூகத்தில் புகவில்லை. சுமார் 300 வருடங்களுக்குள்ளேயே புகுந்தது. இதுதான் வடகலைத் திருமண்காப்பின் தத்வம். இது பரம்பரையாகச் சொல்லி வந்ததைக்கேட்டு எழுதப்பட்டதே தவிர, 'இது இப்படித்தான்' என அடியேனுக்கு ஆக்ரஹம் கிடையாது. கோர்ட்டுகளில் தென்கலை வடகலை வ்யவஹாரங்கள் ஆரம்பமான காலம் முதலானவற்றைக் கோர்ட்டு தீர்ப்புகளைக்கொண்டு ஆராய்ந்தால், இது உபபந்நம் என விளங்கும். ஸரியான ப்ரமாணத்துடன் இந்த வாதம் மறுக்கப் படுமேயானால் எற்கத்தட்டில்லை. இப்போது இந்தப் புண்ட்ரத்துடன் ஸேவைஸாதிக்கும் ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களிடத்தும் ப்ரதிபத்திக்குக் குறையொன்றுமில்லை. வாதமென்று வந்தால் யாருக்குமே விஷயங்களைத் தெளிவுபடுத்தல் கடமையாகிறது.

விஷயம் 5. வடகலை ஆசார்யபுருஷர்கள்

ஸ்வாமி எம்பெருமானார் பின்புள்ளாரும் தம் ஸம்பந்தம் பெற்று வாழ தம் ஶிஷ்யர்களில் 74 ஸிம்ஹாஸநாதிபதிகளை நியமித்தார் என்பது யதிராஜவைபவம், குருபரம்பரை நூல்கள் முதலானவற்றில் காணப்படும் உண்மை.

இந்த 74 ஸிம்ஹாஸநாதிபதிகளின் வம்சத்தவர்களே பஞ்சஸம்ஸ்காரம் செய்ய அதிகாரம் பெற்றவர்கள். மற்றையார் ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் எவ்வளவு சிறந்து விளங்கினாலும் பிறருக்குப் பஞ்சஸம்ஸ்காரம் செய்யலாகாது என்பது எம்பெருமானார் நியமனம். இன்றளவும் தென்னாசார்ய ஸம்ப்ரதாயத்தவர்களால் இந்நியமனம் கடைப்பிடிக்கப்பட்டுவருகிறது.

ஆனால் இக்காலத்து வடகலையார் இம்முறைக்கு ப்ராதாந்யம் கொடுப்பதில்லை. இதில் தேஶிகனுக்கே விப்ரதிபத்தியுண்டென்றும் தெரிகிறதென்பர் பெரியோர்.

ஆகவேதான் ஸ்வாசார்யனை விட்டு ப்ரந்யாஸத்துக்காக ஓர் உத்தமாச்ரமியைப் பற்றுவதென்பது அவர்களில் ஸஹஜமாகிவிட்டது. காலக்ரமத்தில் ஸ்வாசார்யத்யாகமே ப்ரஸித்து விட்டது. இதைக் கண்டு அவர்களில் பலர் சோகிப்பதை அடியேன் நன்கறிவேன்.

நிற்க. வடகலை ஸம்ப்ரதாயத்திலும் 74 ஸிம்ஹாஸனாதிபதிகளில் சேர்ந்த வம்சத்தவர்கள் சிலர் பார்க்கப்படுகிறார்களே என்னில் - அவர்களைப்பற்றி அடியேன் கேள்விப்பட்டதை எழுதுகிறேன். இதிலும் அடியேனுக்கு எந்த ஊற்றமுமில்லை. ஸமாஶ்ரயணத்தை ஓர் ஆசார்ய பரம்பரைக்கு ஸ்வாதீநமாக்காமல் போனால், ஏகாசார்யகத்வம் போய்

விடும். ஆசார்யஸந்ததியாருக்கும் ஜீவநம் ஶ்ரமப்படும் எனத் தெரிந்து கொண்ட—ஜ்ஞாநாநுஷ்டாநத்தால் சிஷ்யர்களை ஸம்பாதித்திருந்த சில பேர் தமக்கும் 74 ஸிம்ஹாஸநாதிபதிகளின் வம்சத்தில் அந்தர்ப்பாவமுண்டென்று காட்டச் சிலபேரின் ஸந்ததியாராகத் தம்மைச் சொல்லிக் கொள்ள ஆரம்பித்தனர் என்பதே பெரியோர்களின் உபபாதனம்.

74 ஸிம்ஹாஸநாதிபதிகளின் வம்சத்திலுமேயா வடகலையார் உள்ளார்கள்? பத்தெட்டு வம்சம் தேறலாம். அல்லது அவ்வம்ஶத்தவர்களிலே சில குடிகள் ஏதோ நிர்ப்பந்தத்தால் வடகலைத் திருமண்காப்பு இட்டுக் கொண்டிருக்கலாம். திருவயிந்திரபுரத்தில் ஓர் அஷ்டகோத்ர குடும்பம் ஸந்நிதியில் தீர்த்தம் பெற வடகலைத் திருமண் இட்டுக் கொண்டும் தீர்த்தம் பெறுமல் வடகலைத் திருமண்ணுடன் விளங்குவதை இன்றைக்கும் காணலாம். ஆகவே 74 ஸிம்ஹாஸநாதிபதிகளுக்கே ஸமாஶ்ரயணம் செய்ய அதிகாரமுள்ளதென்பதை ஒப்புக் கொள்ளாத இந்த ஸமூஹத்தார், தங்களில் சிலரை 'அவர் ஸந்ததி, இவர் ஸந்ததி' என்று சொல்லிக்கொண்டு, 'ஸந்ததியார் வடகலையாராயிருக்கும்போது மூலபுருஷனும் வடகலையே' என்று வாதிட்டுப் பெறப் போகிறதொன்றுமில்லை. தூங்குகிறவன், தொடையில் திரித்தவரை லாபம். அந்த ஆசார்யர்களை வாய்வெருவியாவது புண்ணியம் பெறட்டும்.

விஷயம் 6. ஸந்நிதிகளை ஆக்ரமித்தல்

இப்போது முழுவதும் வடகலையாயிருக்கும் ஒரு சில ஸந்நிதிகள் விஷயமாகவும், அவர்களுக்கும் சில உரிமைகள் உள்ள தென்கலை ஸந்நிதிகள் விஷயமாகவும் கோர்ட்டு ரெகார்டுகள் ஆங்காங்கு எண்ணிறந்தவை காணக்கிடைக்கின்றன. இன்னம் வ்வாதங்களும் நடந்துவருகின்றன. எங்கு எந்த ரெகார்டைப் பார்த்தாலும் ஆக்ரமித்தவர்களும் ஆக்ரமிக்கப்பார்ப்பவர்களும் வடகலையாரே என்பது ப்ரத்யக்ஷமானதொன்று. ஆகவே, எல்லா திவ்யதேசங்களுமே முன்பு வடகலைதான் என மதுராந்தகம் ஸ்வாமி ஸாதிப்பதும் அடியற்றதே யாம். ஏன்? எங்களுக்கும் விட்டுக்கொடுக்லாகாதா? எங்களையும் கோஷ்டி முதலான கைங்கர்யங்களில் கூட்டிக்கொள்ளலாகாதா? என்றால், உரிமை பறிபோகாத இடங்களில், ஸமயங்களில் உங்களுடன் கூடிக்குலாவியே வருகிறோம்.

விஷயம் 7. மைஸூர் பரகால ஸ்ரீயர் வ்ருத்தாந்தம்

இந்த விஷயமும் உண்மை உணர்த்த எழுதப்படுகிறதே தவிர இப்போதைய மடத்தின் சீர்மையில் குறைகாணவல்ல. இம்மடத்தின் தோற்றுவாயைச் சிறிது விளக்கும்படி ஆக்கிவிட்டது நம் மதுராந்தகம் ஸ்வாமியின் நூல்.

இந்த மடம் தேசிகனின் சிஷ்யரான ப்ரஹ்மதந்த்ரஸ்வதந்த்ர ஜீயரை முதன்மையாகக் கொண்டு பரம்பரையாக வந்ததாக ஓர் ப்ரவாதமுமுள்ளது. உண்மை அதுவன்று. இந்த மடம் நவீனம் என்பதற்கு ஏராளமான ரெகார்டுகளுள்ளன.

மைஸூர் அரண்மனையில் ராஜபுரோகிதர் ஒருவர் விரக்தி ஸந்யாஸம் கொண்டார். அவர்களின் பூர்வீகம் கண்டரகோட்டை என்பது. இன்றைக்கும் அவ்வகுப்பாரே ஜீயர் ஸ்வாமியாக வர வேணும் என்கிற நிர்ப்பந்தமுள்ளது. முதன்முதல் ஆச்ரமஸ்வீகாரம் பண்ணிக்கொண்டவர் நல்ல வித்வான். அந்த ப்ராந்தத்தில் அத்வைதிகளையும் சைவர்களையும் வென்று 'பரகாலர்' எனப் பட்டம் பெற்றார். அவரை ராஜா ஆசார்யனாக அபிமானித்து, ஓர் மடம் கட்டிக் கொடுத்து, பூர்ணையன் சத்திரத்தில் சொத்துக்களையும் அவரதீனமாக்கினான். அதனால்தான் தினந்தோறும் ப்ராஹ்மண போஜனம் வழுவாமல் நடக்கிறது அம்மடத்தில். ராஜகுருவாகை யால் மேலக்கோட்டை திருநாராயணபுரத்தில் முதல்தீர்த்தமரியாதை களும் ஏற்பட்டன. அவர் தேசிகஸம்ப்ரதாயஸ்தராகையாலே மேலக் கோட்டையில் தேசிகனின் விக்ரஹப்ரதிஷ்டை பண்ணிவைத்து, ஸந்நிதியில் வடகலைத் திருமண்ணுக்கும் மற்ற உரிமைகளுக்கும் வாதாடி கோஷ்டியில் ஸம்ப்ரதாயத்தையும், திருநாராயணன், பராங்குச பரகால யதிவரர்கள் நீங்கலாக மற்றையாருக்கு வடகலைப் புண்ட்ரத்தையும் பெற்றார். அவரே ராமாநுஜதயாபாத்ரகர்த்தா. கோயில் சண்டை முதன்முதல் ஏற்பட்டது திருநாராயணபுரத்தில் தான். இந்த வ்ருத்தாந்தங்கள் அங்குள்ள குழந்தைகளுக்கும் தெரியும். பரகால ஜீயர்ஸ்வாமி, ஸந்நிதியில் முதல் தீர்த்தமரியாதை பெற்றிருந்தாலும் நினைத்த போதெல்லாம் ஸந்நிதிக்கு வரமுடியாது. ஓர் பட்டத்தில் ஒரு தடவை தான் வரலாம். இந்நிலை ஏன்? நடு நிலையாளர் தீர்மானிக்க வேண்டியதொன்று இது. இம்மடம் வடகலை யாயிருப்பதால் மதுராந்தகம் ஸ்வாமிக்கு ப்ரயோஜனமென்? இம்மடத் தவர்கள் தம் பூர்வாசார்யர்களிடத்து மிக்க த்வேஷமே கொண்டிருந் தார்கள் என்பதும் பல ப்ரமாணங்களால் நன்கு வெளிப்படுகிறது.

இத்தனையும் விஷயமுணர்த்த எழுதப்பட்டதே தவிர, அம்மடத்து ஜீயர் ஸ்வாமிகளிடத்து ஜ்ஞாநாநுஷ்டானங்களில் யாரும் என்றும் குறைகண்டதில்லை. திருநாராயணபுரத்து வித்வான்களும் அவர்களைப் போற்றியே வந்திருக்கிறார்கள். வர்த்தமான ஸ்வாமியும் ஸன்மானிக் கவே படுகிறார்.

விஷயம் 8. அஹோபிலமடத்து வ்ருத்தாந்தம்

தெய்வமல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் சிங்கப்பிரானுக்குத் திருவாராதநம் முதலிய கைங்கர்யங்களைச்செய்ய மணவாளமாமுனிகள் வானமாமலையிலும், திருமலையிலும்போல ஓர் ஜீயர் ஸ்வாமியை நியமித்தார். அவரே ஆதிவண்சடகோப ஜீயர் என்னும் அஹோபிலமடத்து முதல் ஜீயர் ஸ்வாமி. இந்த ஜீயர் ஸ்வாமிக்கு மணவாளமாமுனிகளிடத்து விசேஷ ப்ரதிபத்தியுண்டென்பதை ஆழ்வார்திருநகரியில் இவர் செய்திருக்கும் கைங்கர்யங்களால் அறியலாகிறது. ஸ்ரீரங்கத்தில் ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞையாய் கோயில் கார்யங்கள் இன்றளவும் நடந்துபோருகிறபடி, ஆழ்வார்திருநகரியில் வரவரமுநி திவ்யாஜ்ஞையே நடந்து வருகிறது. ஆக, அந்த ஸந்நிதியில ஆதிவண்சடகோபஜீயர் செய்துபோந்த கைங்கர்யங்கள் ஆழ்வாரிடத்துக்கொண்ட ப்ரதிபத்தியால் என்பதைக்காட்டிலும் மாமுனிகளிடத்து ப்ரதிபத்தியால் என்னக் குறையில்லை. ஆக, அஹோபிலமடம் ஆதியில் தென்கலையே தவிர வடகலையன்று. இதை ஸுதர்சனம் ஸ்தாபகரான ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸய்யங்கார்ஸ்வாமி "அபயப்ரதராஜவிஜயம்" என்னும் நூலில் சுமார் 28 வருஷங்களுக்கு முன்பே பல ஆதாரங்களைக்காட்டி நிரூபித்துள்ளார். அஹோபிலமடத்தாருக்குத் தென்கலை பூர்வாசார்யர்களிடத்தும், விசேஷித்து திவ்யப்ரபந்தங்களிடத்தும், ஆழ்வார்களிடத்தும், ஈடுமுப்பத்தாறுயிரப்படியிடத்தும விசேஷப்ரதிபத்தியுண்டு. முனித்ரயத்தாரைப்போல ஈட்டையும், பெரியவாச்சான்பிள்ளையையும், தத்வ்யாக்யாநங்களையும் இவர்கள் த்வேஷிப்பதில்லை. இதற்கு முக்யகாரணம் மாமுனிகள் ஸம்பந்தமே. ஐந்தாறு பட்டங்களுக்குப்பின் இம்மடம் வடகலையாக மாறினது. கோட்டைவிடுவதற்குத் தென்கலையாராகவும், அசந்தால் ஆக்ரமிக்க வடகலையாராகவுமே பிறந்துவிட்டபோது, இம்மடமும் சில திவ்யதேசங்களும் வடகலையாக மாறினதில் வியப்பொன்றுமில்லை. யதிகள் விக்ரஹாராதநம் பண்ணக்கூடாதென்னும் கொள்கையுடைய வடகலை ஸமூஹத்திலிருந்து ஓர் திவ்யதேசத்தெம்பெருமானுக்கு ஆராதகராக ஓர் யதி எப்படி வந்திருக்கமுடியும்? இவ்விஷயங்கள் அடியேன் பலர் கர்ணபரம்பரையாகச் சொல்லிவருவதைக் கேட்டெழுதினதே தவிர, இது இப்படித்தான் என்கிற ஆக்ரஹமொன்றுமில்லை. மடத்தவர்களிலும், முனித்ரயத்தாரிலும் பரமஸாத்விகர்களாய் ஸஹவாஸயோக்யர்களும் ஸத்காரயோக்யர்களும் மலிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குப் பரம்பராப்ராப்தமான ஓர் ஸம்ப்ரதாயத்தில ஊற்றங்கொண்டு அநுஷ்டாநபரர்களாய் அவ்விர்த்தங்களை நிலைநாட்ட முயலுவதில்

தவறென்ன இருக்கிறது? இவ்விதத்தில் நம் மதுராந்தகம் ஸ்வாமியும் ஸ்வமதஸ்தாபநத்திலிழிந்து, பலநாள்களாக தேசிகன் திருவுள்ளத்தைச் சில விஷயங்களில் தாமும் உலகும் அறியவிரும்பிக் காஞ்சி ஸ்வாமி கேட்டுவரும் கேள்விகளுக்குத் தெளிவாய் ஸமாதாநமெழுதி உலகை உஜ்ஜீவிக்கச் செய்யலாகாதோ?

விஷயம் 9. முனித்ரய வ்ருத்தாந்தம்

இது தவிர ஸம்ப்ரதாயமென்பதை வடகலையாரே ஒப்புக்கொள்ளுகிறார்கள். பிறர் ப்ரமிக்க இவர்கள் 'நாதமுனி யாமுநமுனி ராமாநுசமுனிகளான முனித்ரயம் எங்களுக்கு மூலம்' என்று சொல்லி வந்தாலும், ஒரு சில நூற்றாண்டுகளுக்குள் இருந்த திருக்குடந்தை யதிகள் மூவரே இந்த ஸம்ப்ரதாயத்தைத் தோற்றுவித்தவர்கள் என்பது உலகமறிந்த விஷயம். இந்த ஸம்ப்ரதாயத்தவர்கள்தான் தென்னாசார்யர்களிடத்தும், விசேஷித்துப் பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை, உலகாசிரியர், அழகியமணவாளப் பெருமாள்நாயனார், மணவாளமாமுனிகள் முதலானோரிடத்தும் த்வேஷம் பாராட்டுபவர்கள். இதற்குக் காரணம்—தேசிகன் தமது ரஹஸ்யத்ரயஸாராதிகளில் காட்டிய பல அர்த்தங்கள் இவ்வாசார்யர்களின் க்ரந்தங்களால் அடியறுக்கப்படுவதே. ஸ்ரீகாஞ்சி மஹாவித்வான் ஸ்ரீ உ. வே. ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி இஸ்ஸம்ப்ரதாய வித்வான்களின் வாதங்களை எண்ணிறந்த முறை எடுத்துக் கண்டித்திருப்பதும் உலகறிந்த விஷயமேயன்றோ. இம்முநித்ரயஸம்ப்ரதாயத்தவரே நம் மதுராந்தகம் ஸ்வாமி. ஆகையால் தம் ஸம்ப்ரதாயரக்ஷணம் தமக்கும் பரமாகி, ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநத்தை எழுதினார்போலும்! இதுவா ரக்ஷணப்ரகாரம்?

விஷயம் 10. ஸ்ரீரங்கம் அர்ச்சகர்கள் திருமண்

இவர்கள் ஆகமஸித்த புண்ட்ரதாரிகள். தங்கள் திருமண்காப்பை வடகலை என்றோ, தங்களை வடகலை (தேசிக) ஸம்ப்ரதாயத்தவர்கள் என்றோ அவர்கள் சொல்லிக்கொள்வதில்லை. இவர்கள் வடகலையாரைப்போல் த்ரயோதச (பதின்மூன்று) புண்ட்ரங்களையும் தரிப்பதில்லை, நான்கேதான் தரிக்கிறார்கள். தேசிகன் தனியனைச் சொல்வதில்லை. இவர்களுக்கு பரந்யாஸம் கிடையாது. இவர்கள் தேசிக ஸம்ப்ரதாய ஆசார்ய ஸம்பந்தமும் பெற்றவர்களன்று. இது இவர்களே கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலம். நீண்ட காலமாக இப்படித் தனித்தன்மையோடிருந்த இவர்கள் இப்போது புத்ரஸ்வீகாரத்தாலும், கந்யகாதாந ப்ரதிக்ரஹங்களாலும் வடகலை ஸமுதாயத்துடன் கலந்துவிட்டார்கள். ஆனாலும் ஒருவரைத் தவிர மற்றையார் தேசிக ஸம்ப்ரதாய ஸம்பந்தம் கொள்ளவில்லை.

இவர்களையிட்டு மதுராந்தகம் ஸ்வாமி ஸ்ரீரங்கம் கோயிலையும் பெரியபெருமாளையும் வடகலை என்னமுடியாது. ஆக்கவும் முடியாது. இவ்வூரில் பெரியபெருமாளுக்குச் சாத்தியிருந்த தென்கலைத் திருமண் காப்பின் பாதம் வளைக்கப்பட்டு, கேஸ் நடந்து தென்கலையார் ஜயித்த வ்ருத்தாந்தத்தையும், மற்றும் பல வழக்குகள் நடந்து "கோயில் தென்கலையே" என்று ஹைகோர்ட் தீர்ப்பு ஏற்பட்டிருப்பதையும், தேசிகனுக்குப் புண்ட்ரம் மாற்றியதிலிருந்து அவர் வெளிப்புறப்பட மாட்டாமையையும், ஸமீபத்தில் தேசிகனை எழுந்தருளப்பண்ணத் தொடுத்த கேஸ் விபரீதமாகி, ப்ரவ்ருத்திபரர்களை நிவ்ருத்திபரர்களாக்கிவிட்டதையும் நம் மதுராந்தகம் ஸ்வாமி அறியாமல்போனது— இவரின் இத்தகைய விவாதங்களில் நெஞ்சு செலுத்தாத பெருந்தன்மையைக் காட்டுகிறது. ஆனால் ஸ்ரீரங்கஸ்ரீவிவேசநம் அவரைக் கொண்டு எப்படி உருப்பெற்றதென்பதுதான் தெரியவில்லை.

முடிவுரை

ஆக அடியேன் இந்த ஸ்ரீரங்க ஸ்ரீவிவேசந ஸமாலோசநத்தில் 10 விஷயங்களைச் சுருக்கமாக நிரூபித்திருக்கிறேன். இவைகளே இன்னம் விவரிக்கப்படுமேயானால், மஹாபாரத ஸங்க்யையை எட்டிவிடலாம். அவ்வளவு எழுதித்தான் என்ன பயன்பெறப்போகிறோம்? இரண்டு ஸ்ரீ வைஷ்ணவ ஸமுதாயமும் ஒற்றுமையுடன் வாழவும், ஸம்ப்ரதாய ப்ரவசநம் பண்ணவும், ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைத் தழைக்கச் செய்யவுமே முயலவேண்டும். இரு சாரார்களுமே தங்கள் முன்புள்ள நிலையை நன்கறியட்டும். யார் யாராக மாறப்போகிறார்கள்?

ஆகையால் ஸந்நிதிகளிலும் மற்றவிடங்களிலும் இப்போதுள்ள உரிமைகள் இனி மாறாதபடிக்கு இரு சாராருமே தக்கபடி உறுதிப்படுத்திக்கொண்டு, சாஸ்த்ரார்த்தங்களிலோ, அநுஷ்டாநங்களிலோ பொதுவானவைகளில் ஒன்றுசேர்ந்து வாழ வழிதேடுவதே இனி இரு ஸம்ப்ரதாயத்தவர்களுக்கும் முக்கியமான கடமையாகிறது. இனி மதுராந்தகம் ஸ்வாமியும் இவ்வித ப்ரவ்ருத்தி கொள்ளவேண்டாம். அடியோங்களும் ஸம்ப்ரதாய விவாத க்ரந்தங்களை எழுதுவதில்லை. இவ்வளவையும் அடியேன் எழுதினதற்கு மதுராந்தகம் ஸ்வாமி திறத்தில் க்ஷாமணம் வேண்டிநிற்கிறேன்.

மதுரகவிதாஸன் (திருநாராயணபுரம்)
தி. அ. சதாபிஷேகம் கோவிந்தநரஸிம்ஹார்ய தாஸன், ஸ்ரீரங்கம்.

பின்குறிப்பு:— இதிலெழுதப்பட்ட வாதத்திலோ, விஷயங்களிலோ குற்றம் குறைகளைக் காட்டினால் பணிவுடன் ஏற்றுக்கொள்கிறேன்.